பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 02 2026 SUNDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில், மெட்ரோ மற்றும் நமோ பாரத் ரயில் சேவைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

2. மின்னணு சாதனங்களின் உற்பத்தியில், இந்தியா வலிமைவாய்ந்த நாடாக உருவெடுத்துள்ளதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. இந்தியா - பிரேஸில் நாடுகளுக்கு இடையேயான எரிசக்தி ஒத்துழைப்பு, புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. கிரீஸ் நாட்டின் தென்பகுதியில் உள்ள Kala Limena கடல் பகுதியில் ஏற்பட்ட படகு விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

5. கேரளா மற்றும் மாஹே-வில் இடிமின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில், மெட்ரோ மற்றும் நமோ பாரத் ரயில் சேவைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

மீரட்டில் உள்ள சதாப்தி ரயில் நிலையத்திலிருந்து தெற்கு மீரட் ரயில் நிலையம் வரை மெட்ரோ ரயிலில் பிரதமர் பயணம் செய்கிறார்.

நாட்டிலேயே முதன்முறையாக அதிவிரைவு மெட்ரோ ரயில் சேவை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, 12 ஆயிரத்து 930 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<<

மின்னணு சாதனங்களின் உற்பத்தியில், இந்தியா வலிமைவாய்ந்த நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் திட்டங்கள், காரணமாக மின்னணு சாதனங்களின் உற்பத்தி 12 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக கூறினார்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில், மின்னணு சாதனங்கள் 3வது இடத்தில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

உத்தரபிரதேசத்தில் தொடங்கப்பட்டுள்ள செமிகண்டக்டர் தொழிற்சாலை, ஆண்டுதோறும் 3 கோடியே 60 லட்சம் Chip-களை உற்பத்தி செய்வதற்கான திறன் கொண்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>><<<<<

இந்தியா - பிரேஸில் நாடுகளுக்கு இடையேயான எரிசக்தி ஒத்துழைப்பு, புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஹைட்ரோ கார்பனிலிருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு, விமானங்களுக்கான எரிபொருள் போன்றவற்றின் உற்பத்தியில், இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச உயிரி எரிசக்தி கூட்டமைப்பில், பிரேஸில் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

>>>>><<<<<

பிஜேபியின் வெற்றிக்காக தொண்டர்கள் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று அக்கட்சித் தலைவர் திரு. நிதின் நபின் கேட்டுக் கொண்டுள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

*மத்திய அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை, மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், சமூகவலைதளங்கள் வாயிலாக பரப்பும் நடவடிக்கைகளை தொண்டர்கள் திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் குஜராத் மாநில முதலமைச்சர் திரு. Bhupendra Patel, அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. ஜெகதீஷ் விஸ்வகர்மா, துணை முதலமைச்சர் திரு. Harsh Sanghav உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*>>>>><<<<<*

*புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் போது, காங்கிரஸ் கட்சியினரின் நடவடிக்கை கண்டனத்திற்குரியது என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசநலனுக்கு எதிரான செயல்களில் காங்கிரஸ் கட்சியினர் ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது என்று அவர் கூறினார்.*

*நாட்டின் முன்னேற்றத்தை காங்கிரஸ் கட்சியால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.*

*அரசின் செயல்பாடுகளுக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்க அரசியலமைப்புச் சட்டம் அனுமதித்துள்ள போதிலும், நாட்டின் நலனுக்கு எதிரான செயல்களை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.*

*இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.*

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி-யின் தலைமைத்துவப் பண்பு இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற விழாவில், காலத்தால் அழியாத புகழ்பெற்ற அடல் பிஹாரி வாஜ்பேயி என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டு அவர் பேசினார்.

அவரது பதவிக் காலத்தில் பொக்ரான் அணுகுண்டு சோதனை மற்றும் தில்லி மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அடல் பிஹாரி வாஜ்பேயி பிரதமராக பதவியேற்ற காலத்தில், தாம் மக்களவை உறுப்பினராக பணியாற்றியது குறித்து பெருமிதம் கொள்வதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

ருவாண்டா நாட்டுடன் தொழில்நுட்பம், செயகை நுண்ணறிவு, அணுமின்சக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பரம் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா தயாராக உள்ளது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று அந்நாட்டு அமைச்சர் திரு பவுலா இங்கபாயருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக இருந்தது என்று தெரிவித்தார்.

அறிவியியல் தொழில்நுட்ப துறையில் ஆப்பிரிக்க நாடுகளுடனான இந்தியாவின் ஒத்துழைப்பு விரிவடைந்து வருவதாக அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

நாட்டின் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், புதிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை இணையமைச்சர் திருமதி. Nimuben Jayantibhai Bambhanya தெரிவித்துள்ளார்.

நாகாலாந்து மாநிலம், திமாப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், திறன் அடிப்படையிலான கற்றலை ஊக்குவிக்கும் வகையில், புதிய கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

தாய்மொழியில் கல்வி கற்பதை, புதிய கல்விக்கொள்கை ஊக்குவிப்பதாகவும், வேலைவாய்ப்பு சார்ந்த திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில், பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறப்புக் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சுயசார்பு இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக திருமதி. Nimuben Jayantibhai Bambhanya கூறினார்.

>>>>><<<<<

கிரீஸ் நாட்டின் தென்பகுதியில் உள்ள Kala Limena கடல் பகுதியில் ஏற்பட்ட படகு விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர், 20 பேரை காணவில்லை.

படகிலிருந்து ஏணி மூலம் கப்பலில் ஏறுவதற்கு பயணிகள் முயற்சித்த போது இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்த பகுதியில், மீட்பு பணிகளை மேற்கொள்வதற்காக இரண்டு படகுகள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி 15 சதவீதமாக உயர்த்தப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ளப் பதிவில், இது முன்பு அறிவிக்கப்பட்டிருந்த 10 சதவீத வரியைக் காட்டிலும் அதிகமாகும்.

*இது குறித்த அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து முழுமையாகவும், விரிவாகவும், மதிப்பாய்வு செய்த பின்னரே தாம் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த புதிய 10 சதவீத வரி பிப்ரவரி 24 -ம் தேதி முதல் அமல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*

*>>>>><<<<<*

*வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது, அமெரிக்கா விதித்துள்ள வரி உயர்வு மற்றும் அதுதொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்துள்ளதை அமைச்சகம் சுட்டிக்காட்டிக்காட்டியுள்ளது.*

*>>>>><<<<<*

*நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 725 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.*

*இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், பிப்ரவரி 13ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், நாட்டின் அந்நிய செலாவணி, 8 ஆயிரத்து 663 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், 4 ஆயிரத்து 990 பில்லியன் டாலர் மதிப்பிலான தங்கம் கையிருப்பு அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*கேரளா மற்றும் மாஹே-வில் இடிமின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*வங்கக்கடல், மன்னார்வளைகுடா, கேரள கடலோரப் பகுதிகள் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் சூறாவளிக் காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் அடுத்த 7 நாட்களில் குறைந்த அளவு வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இதனிடையே, தமிழகத்தின் தென்பகுதி, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*>>>>><<<<<*

உலகக்கோப்பை டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், சூப்பர் எட்டு சுற்றில், இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில், இப்போட்டி இன்றிரவு 7.00 மணிக்குத் தொடங்குகிறது.

*>>>>>end<<<<<*